1969 மார்ச் 8]

(இ) எத்தனை கான்ஸ்டேபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் இதர மேல் அதிகாரிகள் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இரண்டு.

(இ) ஆய்வாளர் 1 ; உதவி ஆய்வாளர் 3 ; தலைமைக்காவலர் 8; காவலர் 71.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது மாநில அரசைச் சேர்ந்த போலீஸ் நிலையங்களா ? அல்லது தொழிலைப் பாதுகாப்பதற்காக வேண்டி ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட மத்திய சர்க்காரைச் சேர்ந்த போலீஸ் நிலையங்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாநில அரசினுடைய போலீஸ் நிலையங்கள்.

Demonstration before United States Consulate

* 229 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether a demonstration of Right Communists was held before the Office of the United States Consulate at Madras about the 6th April 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் வலதுசாரியைச் சேர்ந்த சென்னை மாவட்டக் கழகத்தினர் 6—4—1968 அன்று ஊர்வலம் ஒன்றை நடத்தி, சென்னை, மலைச்சாலை (மவுண்ட்ரோடு) அமெரிக்கத் தகவல் நிலையத்தின் முன்பு சுமார் இரண்டு நிமிடங்கள் ஆர்பாட்டம் செய்தனர்.

திரு. இல. பலராமன் : இதனால் அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்திற்குச் சேதம் உண்டா ? இதுபோன்ற மற்ற அந்நிய நாட்டுத் தூதுவர் இல்லங்கள் முன்னால் நடத்தப்படும் ஆர்பாட்டங்களைக் கண்டிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி. ஆர்ப்பாட்டங்களை நடத்துவது அவர்கள் உரிமை. அமைதியைப் பாதுகாக்க வேண்டியது அரசின் உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், 230, 231, 232 ஆகிய மூன்று வினாக்களும் அமைச்சரவர்கள் வேண்டுகோளின்படி ஒற்றிவைக்க படுகின்றன. அடுத்த வினா எண் 236.

மகளிர் மன்றம்

*236 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மகளிர் மன்றங்களால் அரசு என்னென்ன நன்மைகளை எதிர்பார்க்கின்றது ?

(இ) இதுவரை எதிர்பார்த்த நன்மைகளை அரசு பெற்றுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) மகளிர் மன்றங்களை கிராமங்களில் ஏற்படுத்துவதால் கீழ்க்கண்ட நன்மைகளை அரசு எதிர்பார்க்கிறது.

(1) ஜாதிமத வேற்றுமையின்றி கிராமப்பெண்கள் ஒன்றுகூடி பழகுதல்.

(2) சுற்றுப்புற சுகாதாரம், வீட்டு அளவில் செய்யக்கூடிய மருந்துகளை தயாரித்தல். முதலுதவி செய்து பிறகு ஏற்படக்கூடிய பெரும் பிணிகளை தவிர்த்தல்.